www.Padasalai.Net

# *தமிழ் - முதல் தாள்*

பத்தாம் வகுப்பு

## பள்ளிக் கல்வித் துறை

## கிருஷ்ணகிரி மாவட்டம்

## பொதுத் தேர்வு சிறப்புக் கையேடு

## 2012-2013

வெளியீடு

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

கிருஷ்ணகிரி

# தமிழ்

## செய்யுட்பகுதி- ஒருமதிப்பெண் வினா-விடை

1.மாணிக்க வாசகர் பிறந்த ஊர் **திருவாதவூர்**

**2.**மாணிக்கவாசகர் பாடல்கள் **எட்டாம்** திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

3.மாணிக்கவாசகர் கட்டியகோவில் **திருப்பெருந்துரையில்** உள்ளது.

4.மாணிக்கவாசகர் **அரிமார்த்தன பாண்டிய** மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்.

5.ஜி.யு.போப் திருவாசகத்தை **ஆங்கில** மொழியில் மொழி பெயர்த்தார்.

6.திருவாசகத்திற்கு உருகார் **ஒருவாசக்கிற்கும்** உருகார்

7.திருகுறளில் **133** அதிகாரங்களும் **1330** குறட்பாக்களும் உள்ளன.

8.திருக்குறள் **ஆங்கில** முதலான உலகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

9.ஓழுக்கத்தின் எய்துவர் **மேன்மை** இழுகத்தின் எய்துவர் **எய்தாப்** பழி

10. திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் **திருவள்ளுவமாலை.**

11.திருக்குறள் **குறள்** வெண்பாக்களால் ஆன நூலாகும்.

12.'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப்பாடியவர் **பாரதிதாசன்.**

**13.**ஏலாதி **பதினெண்கீழ்க்கணக்கு** நூல்களுள் ஒன்று.

14.கணிமேதாவியாரின் காலம் **கி.பி.5 ஆம் நூற்றான்டு.**

**15.**மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இருநூல்கள் **திரிகடுகம்,ஏலாதி.**

**16.**இரட்டைபக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும் **மணிமேகலையும்** ஆகும்.

17.சிலப்பதிகாரம், மணிமேகலை,**சீவகசிந்தாமணி** வளையப்பதி **குண்டலகேசி** என்பன ஐம்பெருங்காப்பியங்கள்.

18.இளங்கோவடிகள் **சேர** நாட்டைச் சேர்ந்தவர்.

19. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் ' என்று பாடியவர் **பாரதியார்.**

**20.**குடும்பவிளக்கு **பாரதிதாசன்** படைப்புகளில் ஒன்று.

21.பாரதிதாசனார் **புரட்சிகவிஞர்** என அழைக்கப்படுகிறார்.

22.கம்பராமாயணம் **ஆறு** காண்டங்களைக் கொண்ட நூல்.

23.சரசுவதி அந்தாதி **கம்பர்** இயற்றிய நூல்களுள் ஒன்று.

24.கம்பரைப் புரந்தவர் **சடையப்பவள்ளல்.**

**25.** நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் **12 அடிப்** பேரெல்லையும் கொண்ட நூல்.

26.'அரி' என்னும் சொல்லின் பொருள் **நெற்கதிர்.**

**27.**'நல்' என்னும் அடைமொழி பெற்றநூல் **நற்றிணை**

**28.**நற்றிணையைத் தொகுப்பித்தவர் **பன்னாடு தந்த மாறன் வழுதி.**

**29.**நற்றிணை **எட்டுத்தொகை** நூல்களைச் சார்ந்தது.

30.தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் **அப்பூதியடிகளார்.**

**31.**சேக்கிழார் பெருமான் அருளியது **பெரியபுராணம்.**

**32.**'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' எனப்பாடியவர் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.**

**33.**போலிப்புலவர்களைத் தலையில்குட்டுபவர் **பிள்ளை பாண்டியன்**

**34.**நால்வகைப் பாக்களும் வயலுக்கு **வரப்புகளாக** அமைந்துள்ளன

35. இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்.

36.அறனீனும் இன்பமும் ஈனும் **திறனறிந்து** தீதின்றி வந்த பொருள்.

37.திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் **மூத்த அறிவுடையார்**.

38.அரியவற்றுள் எல்லாம் அரிது. **பெரியார்** பேணிதமராக் கொளல்.

39.முதலிலார்க்கு **ஊதியம்** இல்லை.

40.திருநாவுக்கரசரின் தமக்கையார் **திலகவதியார்** ஆவார்.

41.திருசாவுக்கரசர் அருளிய பாடல்கள் **தேவாரம்** என வழங்கப்படுகிறது.

42. திருநாவுக்கரசர் காலம் **கி.பி 7 ஆம்** நூற்றாண்டு.

43'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் பாடல் **பாரதியாரை** "அச்சமில்லை அச்சமில்லை" எனப்பாடத் துாண்டியது.

44.சீறாப்புராணத்தை இயற்றியவர் **உமறுப்புலவர்.**

**45.**உமறுப்புலவரை ஆதரித்த வள்ளள் **சீதக்காதி**

**46.**சீறாப்புராணம் **மூன்று** காண்டங்களையுடையது.

47.'கேழல்' என்பதன் பொருள் **பன்றி**

**48.**கலித்தொகை **எட்டுத்தொகை** நூல்களில் ஒன்று.

49.நெய்தல் கலியைப்பாடியவர் **நல்லந்துவனார்.**

**50.**'போற்றாரைப் பொறுத்தல்' என்பது **பொறை** எனப்படும்.

51.கலம்பகம் **96** வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.

52.பணை என்னும் சொல்லின் பொருள் **மூங்கில்**

**53.**தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் **குடி**போன்றிருந்தேனே.

**54.**நாலயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் **திருவாய்மொழி** குலசேகரர் பாடியதாகும்.

55.பெருமாள் திருமொழியில் **105** பாசுரங்கள் உள்ளன.

56.குலசேகரராழ்வார் பாடல **முதலாயிரம்** தொகுப்பில் உள்ளது.

## 02-உரைநடை –ஒருமதிப்பெண் வினா-விடை

01.தமிழர் மனித வாழ்வை **அகம் புறம்** எனப் பிரித்தனர்.

02. குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி **தமிழ்மொழி**

03. 2004. ஆம. ஆண்டு **அக்டோபர்** திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.

04.தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியில் அறிஞர் **மாக்ஸ்முல்லர்.**

05.பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் **பாவாணர்.**

06.இன்றைய மதுரையில் **மூன்றாம்** தமிழ்ச்சங்கம் இருந்தது.

07.தமிழர்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு

08.பெரியார் சமூக **முரண்களை** எதிர்த்தவர்: மூடக்கருத்துகளை **முட்டறுத்தவர்**

09.அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர் **பெரியார்**

10.பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று **சொத்துரிமை.**

11.மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசியராகப் பணியாற்றினார்.

12.அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது **பாரத ரத்னா.**

13.வெறும் பேச்சுக்கும் **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.

14.பேச்சு முடிவில் **சுருக்கத்தைக்கூறிக்** கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

15.நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த பெரிய கலை **பேச்சுக்கலை.**

16.மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் **பேறறிஞர் அண்ணா.**

17.நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத்தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பர்.

18.படப்பிடிப்புக் கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.

19.இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு **வேடிக்கையாக** இருக்கும்.

20.இலெமுரியாவை **மனித** நாகரிகத் தொட்டில் என்பர்.

21.தனக்குவமையில்லா ஒரு **தனிஇனம்** தமிழ்இனம்.

22.’பண்ணொடு தமிழ்ழொப்பாய்’ எனத்தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் **தேவாரம்.**

23.உலகம் என்னும் தமிழ்ச்சொல் **உலவு** என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.

24.தமிழர்கள் நிலத்தை **ஐந்து** வகையாகப் பிரித்துக் காட்டினர்.

25. காந்தியடிகள் **சிரவனபிதுர்பத்தி** என்னும் நாடக நூலைப் படித்தார்.

26.திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்.**

**27.**காந்தியடிகள் **அரிசந்திரன்** நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.

28.அறநெறியாகப் போற்றப்பட லேண்டியவை **எளிமை,சிக்கனம்.**

29.பகைவனிடமும் அன்புகாட்டு எனக்கூறிய நூல் **பைபிள்.**

30.இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் **வடலூர்.**

31.இராமலிங்கர் தமிழ்மொழியே **இறவாதநிலை** தரும் என்று கருதினார்.

32.‘ உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன”எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் **பெரியபுராணம்.**

33.வள்ளாலாரின் இயற்பெயர் **இராமலிங்கர்.**

35.நாள்தோறும் கல்வியில் **புதுப்புதுத்துறைகள்** உருவாகிக்கொண்டிருக்கின்றன.

36.காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் **எழுத்துத்** தேர்வும் உண்டு.

37.பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத்தகுதி **பன்னிரண்டாம் வகுப்பு.**

38.விரல்கள்பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் **தாரா பாரதி**

**03.பொருத்துக-செய்யுட்பகுதி (விடைகள் நேர்நேராகத் தரப்பட்டுள்ளன.)**

| | |
|---|---|
| 1.விரை | -மணம் |
| 2.கழல் | -அணிகலன் |
| 3.ததும்பி | -பெருகி |
| 4.மெய் | -உடல் |
| 5.புகார்காண்டம் | -10 காதைகள் |
| 6.மதுரைகாண்டம் | -13 காதைகள் |
| 7.வஞ்சிகாண்டம் | -7 காதைகள் |
| 8.இடர் | -துன்பம் |
| 9.இறை | -தலைவன் |
| 10.இந்து | -நிலவு |
| 11.செறு | -வயல் |
| 12.வித்து | -விதை |
| 13.யாணர் | -புதுவருவாய் |
| 14.வட்டி | -பனையோலைப்பெட்டி |
| 15.மேதி | -எருமை |
| 16.சந்தம் | -அழகு |
| 17.கோதில் | -குற்றமில்லாத |
| 18.உழுவை | -புலி |
| 19.அங்கனர் | -சிவன் |
| 20.கான் | -காடு |

21.மடங்கல் -சிங்கம்

22.எண்கு -கரடி

23.பண்பு -பாடறிந்து ஒழுகல்

24.அன்பு -தன்கிளை செறாமை

25.அறிவு -பேதையார் சொல் நோன்றல்

26.செறிவு -கூறியது மாறாமை

**பொருத்துக: உரைநடைப்பகுதி (விடைகள் நேர் நேராகத் தரப்பட்டுள்ளன)**

1.ஈஸ்ட்மென்-படச்சுருள்

2.எடிசன்-ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி

3.எட்வர்டுமைபிரிட்சு-இயக்கப்படம்

4.வால்ட் டிஸ்னழ-கருத்துப்படம்

5.சத்திய சோதனை-காந்தியடிகள்

6.பகவத் கீதை-இந்து சமய நூல்

7.திருக்குறள்-திருவள்ளுவர்

8.பைபிள்-கிறித்துவச் சமயநூல்

9.வினையே ஆடவர்க்குயிர்-குறுந்தொகை

10.முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை-தொல்காப்பியர்

11.உடம்பை வளர்த்தேன்:உயிர்வளர்த்தேனே- திருமூலர்

12.விரல்கள் மூலதனம்-தராபாரதி.

**04.விடைகேற்ற வினா அமைத்தல்: (4 மதிப்பெண்கள்)**

1.பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார். **(பெரியார் எதை விரும்பினார்? )**

2.பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.**(பெரியார் எதை ஏற்க மறுத்தார்? )**

3.செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.**(எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்? )**

4.திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி,ஒலிப்படக்கருவி பயன்படுகிறது.**(ஒளிஇஒலிப்படக்கருவி எதற்குப் பயன்படுகிறது? )**

5.தமிழர்கள் அரபு நாட்டுடனும்இயவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.**(தமிழர்கள் எந்தெந்த நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்? )**

6.காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.**(காந்தியடிகள் கதரை எவ்வாறு கருதினார்? )**

7.இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும்இமொழிப்பற்றும்இதெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும். **(கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்? )**

8.இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள்இஇளங்கலைக்கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.**(பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர்வதற்கான தகுதி என்ன? )**

9.தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன. **(எங்கு பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன? )**

10.திரைப்படம் எடுப்பதனைவிட செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும். **(திரைப்படம் எடுப்பதனைவிட வேறு எது கடினமான பணியாகும்? )**

11.நடிப்புக்கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி.இராமச்சந்திரன் கருதினார். **(எவற்றை தம் இரு கண்களாக எம்.ஜி.இராமச்சந்திரன் கருதினார்? )**

**05.பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:-**

**1.''அரியா சனமுனக்கே யானால் உனக்குச்**

**சரியாகும் உண்டோ தழிழே''.**

**2.''நல்லேரினால் செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்''**

**3.''தித்திக்குந் தெள்ளமுதாய் தெள்ளமுதின் மேலான**

**முத்திக்கனியே என் முத்தமிழே''.**

**வினாக்கள்:**

1.இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? **தமிழ்விடுதூது**

2.இப்பாடலின் ஆசிரியர் யார்? – **அறிய இயலவில்லை.**

3.பா நான்கு – **வெண்பா,ஆசிரியப்பா,கலிப்பா,வஞ்சிப்பா**

4.நாற்கரணம் - **பிரிக்க:- நான்கு + கரணம்**

5.சொல்லேர் உழவர் யார்? – **புலவர் பெருமக்கள்.**

6.புலவர் பெயர்:- **பிள்ளைப்பாண்டியன்,வில்லிபுத்தூர் ஆழ்வார்,ஒட்டக்கூத்தர்.**

7.சீத்தையர் - **போலிப்புலவர்கள்.**

8.உன்னோடுவந்துரைக்கும் - **பிரிக்க – உன்னோடு + உவந்து + உரைக்கும்.**

9.நாளிகேரம் - **பொருள் கூறுக:- தென்னை.**

10.எதுகைகள் : **அரியா – சரியாரும், திகழ்பா – புகழ்பா**

**தித்திக்கும் - முத்திக்கும், உண்ணப்ப-விண்ணப்பம்**

**நல்லேர் - சொல்லேர், நாலே – மேலே**

**பாத்தனதாக் - கூத்தனிவர், குட்டி – வெட்டி**

11.செவியறுத்து – **பிரித்தெழுதுக:- செவி + அறுத்து**

**06.செய்யுள் குறுவினாக்கள் ( 2 மதிப்பெண்):-**

1.உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?

**1.உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.**

**2.அது அனைத்து சிறப்புகளையும் தரவல்லது.**

2.நன்றிக்கு வித்தாவது எது?

**1.நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்.**

**2.நல்லொழுக்கம் ஒருவருக்கு மிகுந்த சிறப்பைத் தரும்.**

3.பல கற்றும் கல்லார் அறிவிலார் - யார்?

**1.உலகில் வாழும் நல்லவர்களோடு பொருந்தி வாழத் தெரியாதவர்கள் பல கற்றும் கல்லாதவர் ஆவார்.**

4. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?

**1.ஊக்கமுடையான் இடங்கி இருப்பது**

**2.ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின் வாங்குவது போன்றதாகும்.**

5.கையுறைப்பொருள்களாகக் குகன் கொண்டு சென்றவை எவை?

**1.குகன் கையுறைப் பொருட்களாக தேனையும் மீனையும் கொண்டு சென்றான்.**

**2.இராமனுக்காக.**

6.குகனின் வேண்டுகோள் யாது?

**1.குகனின் மனம் ஊருக்குச் செல்ல இயலவில்லை.**

**2.தன்னால் இயன்ற தொண்டினைச் செய்து இராமனுடன் இருக்க அனுமதி வேண்டினான்.**

7.அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?

**1.களவு,பொய்,காமம்,சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்.**

**2.சிவபக்தி உடையவர்.**

**3.திருநாவுக்கரசரிடம் பேரன்பு உடையவர்.**

8.அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்?

**1.அளவைகள் 2.பசுக்கள்**

**3.நிறைகோல் 4.எருமைகள்**

**5.மக்கள் 6.தண்ணீர்பந்தல்**

9.வயலின் வரப்புகள் யாவை?

**1.வெண்பா 3.கலிப்பா**

**2.ஆசிரியப்பா 4.வஞ்சிப்பா**

10.போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

**1.பிள்ளைப்பாண்டியன் 2.வில்லிப்புத்தூர் ஆழ்வார்**

**3.ஒட்டக்கூத்தர்.**

11.நல்லோர் தொடர்பைக் கைவிடல் எத்தன்மைத்து?

**1.பலரோடு பகைத்துக் கொள்வதைவிட**

**2.பலமடங்கு தீமையைத் தரும்.**

12.பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?

**1.மதிக்கத் தகாதவரையும் மதிக்கச் செய்வது பொருள் ஆகும்.**

13.தேவாரம் - பொருள் எழுதுக.?

**1.தே + வாரம் - தெய்வத்தன்மையுடைய இசைப்பாடல்.**

**2.தே + வாரம் - தெய்வத்திற்குச் சூட்டப்படும் பூமாலை போன்ற பாமாலை.**

14.அறிவு எனப்படுவது யாது?

**1.அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.**

15.ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?

**1.நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.**

**உரைநடை – குறுவினாக்கள்:- (2 மதிப்பெண்கள்)**

1.உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?

**1.உலகில் உள்ள மொழிகள் ஆறாயிரம்**

**2.இலக்கண இலக்கிய வளமுடையவை மூவாயிரம்.**

2.மொமி மாற்றம் என்றால் என்ன?

**1.ஒரு மொழிப் படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்று பெயர்.**

3.கல்விப் படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?

**1.பல்வகை விலங்களின் வாழ்க்கை.**

**2.பன்னாட்டு மக்களின் வாழ்க்கை.**

**3.நேரில் காண முடியாத பல இடங்களை நேரில் காணலாம்.**

4.திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?

**1.செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.**

**2.ஒலி,ஒளிப்பதிவுகளைத் தனித்தனிப்படச்சுருள்களில் அமைப்பர்.**

5.கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

**1.மலை – குமரிமலை.**

**2.ஆறு – ப.்றுளி ஆறு.**

6.ஞாலம் - பெயர்க் காரணம் கூறுக?

**1.ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பெயர்.**

**2.எதனையும் பற்றிக் கொண்டில்லாமல்,உலகம் தொங்கிக் கொண்டிருப்பதைக் குறிக்கும்.**

7.காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை?

**1.அன்பு 2.உறுதி**

**3.உண்மை 4.இன்னாசெய்யாமை.**

8.எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?

**1.உண்மை பேசுதல்.**

**2.பகைவரிடம் அன்பு பாராட்டுதல்.**

**3.எளிமை.**

**4.சிக்கனம்.**

9.ஒவ்வொருவரும் குறைந்தது எக் கல்வித்தகுதியினைப் பெறுதல் வேண்டும்?

**1.மேல்நிலைக் கல்வித் தகுதி.**

**2.அதுவே அடிப்படைக்கல்வித் தகுதி ஆகும்.**

10.தற்போது வளர்ந்து வரும் இணைடு தொழில் நுட்பத் துறைகள் யாவை?

**1.உயிரி தொழில் நுட்பத்துறை.**

**2.நுண்ணியில் தொழில் நுட்பத்துறை.**

11.பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக?

**1.பி.ஏ. – தமிழ் இளங் கலை.**

**2.பி.எஸ்.ஸி. - கணித இளம் அறிவியல்.**

**3.பி.காம். - இளம் வணிகவியல்.**

**4.பி.எட். - இளம் கல்வியியல்.**

12.சத்திய தருமசாலையில் வள்ளவார் செய்த தொண்டு யாது?

**1.சாதி மத வேறுபாடு இன்றி பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.**

**07. செய்யுள் - சிறு வினாக்கள் ( 4 மதிப்பெண் வினாக்கள்)**

**1. வாயிற் காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்தினார்?**

- கொற்கை துறைமுகத்தின் தலைவனே வாழ்க!
- பொதிகை மலையின் தலைவனே வாழ்க!
- பழிச்சொல் சேராத பஞ்சவனே வாழ்க!

**2. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?**

- கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று. அது அசர நீதி என்றான்.
- "கண்ணகி'' என் கால் சிலம்பில் உள்ளது மாணிக்கப் பரல்கள் என்றாள்.

- "மன்னன்" எம் சிலம்பில் உள்ளது முத்துக்கள் என்றான்.
- கண்ணகி கால் சிலம்பை உடைத்து மன்னனுக்கு உண்மையை உணர்த்தினாள்.
- மன்னன் உண்மை அறிந்து, என் வாழ்நாள் அழியட்டும் என்று வீழ்ந்தான்.

**3. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?**

- அடைக்கலமாக வந்த புறாவுக்காகத் தன் உடலையே தந்தாள் சிபி சக்கரவர்த்தி.
- பசுவின் துயரைத் துடைக்க,தன்மகனை தேர்க்காலில் இட்டான் மனுநீதிச்சோழன்.

**4. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?**

- பொன்,முத்து,பவளம்,மாணிக்கம் ஆகியவை வேறு இடங்களில் பிறக்கும்.
- அவை மாலையாக கோர்க்கும் போது ஒன்று சேரும்.
- அதுபோலச் சான்றோர் ஒன்றாகச் சேர்வர்.

**5. சாதனைப்புக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?**

- ஒரு செடியின் வெற்றி பூவினைக் கொடுப்பதில் உள்ளது.
- பூவினைக் கொடுக்கும் வரை செடி ஓய்வெடுப்பதில்லை.
- இதுபோல இலட்சியத்தினை நெருங்கும் வரை,இடையூறுகள்,தடைகளைக்கண்டு தயங்கக்கூடாது.
- தொடர்ந்து முயன்றால் சாதனைப்பூக்களை அடைய முடியும்.

**உரைநடை – சிறுவினாக்கள் (4 மதிப்பெண்கள்):-**

**1.பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**

- பெண்களின் உரிமையான கல்வி சமூக மாற்றத்திற்கு முக்கியம்.
- உலகப் படிப்பையும் ஆராய்ச்சிப் படிப்பையும் கொடுக்க வேண்டும்.

**பெண்களைப் பகுத்தறிவு இல்லாத சீவன்களாக வைத்திருப்பது பெருங்கொடுமை.**

**2.பெண்ணுரிமையை விளக்குக?**

- பெண்கள் உரிமை பெற்றுப்புது உலகைப் படைக்க வேண்டும்.
- கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருக்கக்கூடாது.
- சமூகத்தொண்டு புரியும் பெண்களாகவும் இருக்க வேண்டும்.

**3.மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**

- மணக்கொடை ஒரு பெருநோய்.
- மகனின் கல்விச்செலவை முதலீடாய் கருதுகின்றனர்.
- அம்முதலீட்டை மனைவி மூலம் மீண்டும் பெற நினைக்கிறார்கள்.
- இளைஞர்கள் இதனைத் தடுக்க வேண்டும்.

**4.பேச்சின் தொடக்கம் எவ்வாறு இமைதல் வேண்டும்?**

- கேட்போரை ஈர்க்கும் விதமாகத் தொடங்க வேண்டும்.
- சுருக்கமான முன்னுரையுடன் தொடங்கி,உடனே பொருளுக்குள் செல்ல வேண்டும்.
- இடத்திற்கு ஏற்பத் தொடக்கவுரை அமைய வேண்டும்.

**5.மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

- நான் தேச பக்தனாக இருப்பதற்குக் காரணம் நான் மனிதநேயத்துடன் இருப்பதால்.
- நான் ஒரு குஜராத்தியன் என்பதைவிட "இந்தியன்" என்று கூறுவதையே விரும்புகிறேன்.
- மொழியையும் நாட்டையும் தாண்டி மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது.

**08.செய்யுள் - நெடுவினாக்கள் (8 மதிப்பெண்கள்):-**

**1."தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?**

- புறாவின் துயரைத்தைப் போக்கியவன் சிபி மன்னன்.
- பசுவின் துயரைத்தைத் துடைக்க,தன் மகனை தேர்க்காலில் இட்டான் மனுநீதிச்கோழன்.

- புகழ்மிக்க குடியில் தோன்றியவன் மாசாத்துவான்.
- பெரும் புகழுடைய நகரம் புகார் நகரம்.
- ஊழ்வினைப் பயனால்,வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு என் கணவர் வந்தார்.
- என் காற்சிலம்பினை விற்க முயன்றார்.
- உன்னால் கொலை செய்யப்பட்ட என் கணவர் பெயர் கோவலன்.
- அவருடைய மனைவியாகிய எனதுபெயர் கண்ணகி.

**2.ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க?**

- உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.
- அனைத்து சிறப்புகளையும் தரவல்லது.
- ஒழுக்கத்தினால் உயர்வது ஒழுக்கம்.
- இழுக்கத்தினால் எய்துவது பெரும்பழி.
- நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்.
- நல்லோழுக்கம் ஒருவற்கு மிகுந்த சிறப்பைத் தரும் என்றும் இடுப்பைத்தருவது தீயொழுக்கம்.
- உலகில் வாழும் நல்லவர்களோடு பொருந்தி வாழத்தெரியாதவர்கள் பலகற்றும் கல்லாதவர் ஆவார்.

**உரைநடை – நெடுவினாக்கள் ( 8 மதிப்பெண்கள்):-**

**1.பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக?**

**(அல்லது)**

**பெண் முன்னேற்றத்திற்குச் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக?**

- நமது சமுதாயதில் பெண்கள் சார்ந்த தலைகீழ் புரட்சி ஏற்பட பெண்கல்வி தேவை.
- பெண்களின் உரிமையான கல்வி சமூகமாற்றத்திற்கு முக்கியம்.
- பெண்களுக்கு உலகப்படிப்பையும் ஆராய்ச்சிப் படிப்பையும் கொடுக்கவேண்டும்.
- பெண்களைப் பகுத்தறிவு இல்லாத சீவன்களாக வைத்திருப்பது பெருங்கொடுமை.
- பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்.
- கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இருக்கக்கூடாது.
- சமூகத் தொண்டு புரியும் பெண்களாகவும் இருக்க வேண்டும்.
- மணக்கொடை,குழந்தைத் திருமணம் ஒழிக்கப்பட வேண்டும்.
- ஒழுக்கமும் கற்பும் இருபாலருக்கும் சமம்.
- கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை.

**2.திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகளைத் தொகுத்தெழுதுக?**

- திரைப்படம் எடுக்கப்படும் முன்,திரைப்படக்கதை,கதைமாந்தர்தேர்வு,தேர்வு செய்யப்பட்டக்கதை முதலியன ஆயத்தம் செய்யப்படுகின்றன.
- நடிகர்,நடிகையர்,தோழன்,தோழியர்,பணியாளர்கள் என நடிகர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.
- அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்படுகின்றன.
- இசைவான குரல் இல்லாதவர்களுக்கு வேறு ஒருவர் குரல் தர முடியும்.
- இயக்குநரும்,உதவி இயக்குநரும் நடிக்கவைக்கின்றனர்.
- படிப்பிடிப்பின் மூலம் திரைப்படக் காட்சிகள் படமாக்கப்படுகின்றன.

09.மனப்பாடப்பகுதி – திருக்குறள்: (2+2=4 மதிப்பெண்):-

1.ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்.

2.அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை

ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

3.ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி.

4.நன்றிக்கு வித்தாகும் நல்லோழுக்கம் தீயொழுக்கம்

என்றும் இடும்பை தரும்.

5.உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்.

6.பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்

வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

7.இருவினை என்ப உளவோ கருவியாற்

காலம் அறிந்து செயின்.

8.ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்

கருதி இடத்தாற் செயின்.

9.ஞாலம் கருதி இருப்பர் கலங்காது

ஞாலம் கருது பவர்.

10.எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே

செய்தற் கரிய செயல்.

11.அறனறிந்து முத்த அறிவுடையார் கேண்மை

திறனறிந்து தேர்ந்து கொளல்.

12.அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல்.

13.இடிப்பாரை இல்லதா ஏமாரா மன்னன்

கெடுப்பார் இலானுங் கெடும்.

14.முதலிலார்க்(கு) ஊதிய மில்லை மதலையாம்

சார்பிலார்க் கில்லை நிலை.

15.பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல்.

16.பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல்ல தில்லை பொருள்.

17.அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து

தீதின்றி வந்த பொருள்.

18.இருளோடும் இன்பொடும் வாராப் பொருளாக்கம்

புல்லார் புரள விடல்.

20.செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்

எய்தனிற் கூரிய தில்.

**சிலப்பதிகாரம்:- (6 மதிப்பெண்)**

வாயிற் கடைமணி நடுநா நடுங்க

ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான்தன்

அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்

ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி

மாசாத்து வாணிகன் மகனை யாகி

வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்

சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்

கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்

கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி.

**கம்பராமாணம்:- (6 மதிப்பெண்):-**

1. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
   முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
   கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
   இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

2. துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
   பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்
   முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா
   அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்.